## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை

## அசல் வழக்கு எண். 51/2018

PW2 – திரு.அருள்சூசை நாள். 15.12.2023

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.S.துரைமுருகன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை**

1. வாதியும், நானும் ஒரே சமுதாயத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். வாதியும், நானும் ஒரே அரசியல் கட்சியை சார்ந்தவர்கள் என்றால் இல்லை. வாதி எங்கள் ஊரில் தலைவராக உள்ளார் என்றால் சரிதான். வேதமுத்து என்பவரின் தகப்பனார் பெயர் என்னவென்றால் சூசை என்கிற சூசைமுத்து. வேதமுத்துவின் தந்தை பெயர் சூசை என்கிற சூசைமுத்து என்பதற்கு ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி தெரியாது. மேற்படி சூசை என்கிற சூசைமுத்துவிற்கு எத்தனை மக்கள் என்றால் 2 நபர்கள் ஆவார்கள். வேதமுத்துவிற்கு எத்தனை மனைவிகள் என்றால் 2 மனைவிகள் ஆவார். வேதமுத்துவின் குடும்பத்தை பற்றிய அனைத்து விவரங்களும் தெரியுமா என்றால் தெரியும்.

2. எனக்கு ஊரில் எவ்வளவு நிலம் உள்ளது என்றால் 5 1/2 ஏக்கர் உள்ளது, சர்வே எண் தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் அதை பற்றி தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்களை வாதி தான் வழக்கறிஞரிடம் கூறினார் என்றால்

சரியல்ல, நான் தான் கூறினேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வாதி என்னை அழைத்தாரா என்றால் அவர் அழைக்கவில்லை, நானாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இவ்வழக்கு எதற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வாதி அனுபவத்தில் உள்ள அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தை 1ம் பிரதிவாதி மோசடியாக கிரையம் ஏற்படுத்தியதின் அடிப்படையில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் சுமார் 3ல் இருந்து 4 செண்ட் இருக்கும். நான் அரசாங்கத்தில் இருந்து ஒப்படைப்பு பட்டா வாங்கியுள்ளேனா என்றால் வாங்கவில்லை. அரசாங்கத்திடம் நான் அனுபவம் செய்யும் இடத்திற்கு தான் ஒப்படைப்பு பட்டா கேட்டுக் கொண்டுள்ளேன் என்றால் சரிதான். பொதுவாக ஒரு இடத்தை யார் அனுபவம் செய்கிறார்களோ அவர்களுக்கு தான் அரசாங்கம் பட்டா வழங்கும் என்றால் (**சாட்சி இக்கேள்வியை புரிந்து கொள்ளாமல் வாதி தான் அனுபவம் செய்து வருவதாக பதிலளித்தார்**.) வாதியின் சகோதரர் அந்தோணிக்கும், அவரது தாயார் லூர்துமேரிக்கும் ஒப்படைப்பு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்திற்கு தெற்கு பக்கம் வழங்கப்பட்டுள்ளது.

4. தாவா சொத்திற்கு தெற்கு பக்கம் பாதை உள்ளது என்றும் பாதைக்கும் அடுத்து தான் ஒப்படைப்பு பட்டா அந்தோணிக்கும், லூர்துமேரிக்கும் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி நபர்களுக்கு எந்த வருடம் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் ஞாபகமில்லை. 1ம் பிரதிவாதிக்கு ஒப்படைப்பு பட்டா வழங்கிய பின்னர் தான் அந்தோணிக்கும், லூர்துமேரிக்கும் ஒப்படைப்பு பட்டா வழங்கப்பட்டது என்றால் அதை பற்றி தெரியாது. மேற்படி அந்தோணி எப்பொழுது பாதிரியாராக சென்றார் என்றால் சுமார் 15 வருடம் இருக்கும். தற்போது அந்தோணி என்பவர் எங்கு பாதிரியாராக உள்ளார் என்றால் சிவகங்கையில் உள்ள ஒரு கிறித்தவ சபையில் உள்ளார். மேற்படி அந்தோணி

பாதிரியாராக ஆன பிறகு தான் ஒப்படைப்பு பட்டா அவருக்கு வழங்கப்பட்டது என்றால் அதை பற்றி தெரியாது.

5. நான் செங்குடி கிராம ஊர்த்தலைவராக உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிராமத்தில் பிரச்சனை ஏற்பட்டு என்னிடம் கோரிக்கை வைத்தால் பஞ்சாயத்து செய்வேனா என்றால் செய்வேன். வாதி மற்றும் 1ம் பிரதிவாதி என்னிடம் தாவா சொத்து தொடர்பாக பஞ்சாயத்து வைக்க கூறினார்களா என்றால் இல்லை. வாதி என்னிடம் தாவா சொத்து தொடர்பாக பஞ்சாயத்து வைக்க கோரி அதனடிப்படையில் 1ம் பிரதிவாதியை அழைத்த போது, வழக்கு நிலுவையில் உள்ளதால் 1ம் பிரதிவாதி வரமறுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மேற்படி பஞ்சாயத்திற்கு அழைத்து வராததால் தான், அவருக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி பஞ்சாயத்து தலைவராக இருப்பதால் எனது பெயரில் ஒப்படைப்பு பட்டா வாங்க வேண்டி இருப்பதால் அவருக்கு ஆதராாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தான் நாளது தேதி வரை தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல, வாதி தான் அனுபவம் செய்து வருகிறார்.

6. வாதி அனுபவம் செய்து வருவதற்கு நீதிமன்றத்தில் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றும், தற்போது நான் ஏதேனும் அது தொடர்பான ஆவணம் எடுத்து வந்துள்ளேனா என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பது பற்றி தெரியாது, நான் எந்த ஆவணமும் எடுத்து வரவில்லை. தாவா சொத்து வாதிக்கு எவ்வகையில் பாத்தியப்பட்டது என்றால் வேதமுத்துவின் தகப்பனார் சூசைமுத்துவிற்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்தாகும். சூசைமுத்துவின் மக்கள் சூசைமுத்துவின் சொத்துக்களை பாகம் செய்து கொண்டார்களா என்றால் பாகம் பிரித்து கொண்டனர். மேற்படி பாகப்பிரிவினை எவ்வாறு நடைபெற்றது என்றால் ஞாபகமில்லை.

7.	வேதமுத்துவின் மக்கள் பாகப்பிரிவினை செய்து கொண்டார்களா என்றால் செய்துகொண்டார்கள். எவ்வாறு பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்திற்கும் வாதிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான அனைத்து வருவாய் துறை ஆவணங்களும் 1ம் பிரதிவாதி பெயரில் தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

(ஒம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை